# யூத முதாதையர்

ஆசிரியர் : எமது ஆதி யூத மூதாதையர்கள் சிலரின் பெயர் கூறுங்கள்.

ஆமர : ஆபிரகாம் ............ யோசேப்பு ......

குமார் : மோசே

நயனா : தானியேல்

ஆசிரியர் : மிக நன்று, குமார் மோசே என்றவுடன் உங்களுக்கு என்ன நினைவு வருகின்றது?

கமலா : இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத் தனத்தில் இருந்து மீட்டவர் மோசே.

ஆசிரியர் : இஸ்ரயேல் மக்கள் கடவுளிடம் எவ்வாறு வேண்டுதல் செய்தனர்.

குமார் : துன்பம் ஏற்பட்ட ஒவ்வொரு வேளையிலும் கடவுளை நோக்கி முணுமுணுத்தனர்.

ஆசிரியர் : நல்ல மறுமொழி சொன்னீர். அடிமைப் பணிகளில் ஈடுபட்டிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு எவ்வித சுதந்திரமும் இருக்கவில்லை. அவர்கள் சுமையான வேலைகளைச் செய்து துன்பத்துடன் வாழ்ந்து வந்தனர். கடவுளுடன் கதைப்பதற்குக் கூட நேரம் இல்லாமல் இருந்தனர்.என்றாலும் கடவுள் அவர்களது முறையீடுகளுக்கு செவிமடுத்தார். மோசேயுடன் எகிப்திலிருந்து வெளியேறிய அவர்கள் கடந்து செல்ல வேண்டி இருந்த கடல் என்ன?

நயனா : செங்கடல்.

ஆசிரியர் : செங்கடலைக் கடப்பதற்காக அவர்களுக்கு உதவி செய்தவர் யார்?

குமார் : கடவுள்.

ஆசிரியர் : சரியான பதில். அவர்கள் கடவுளின் உதவியால் செங்கடலைக் கடந்த பின்னர் பாடல்கள் பாடி, நடனம் ஆடி கடவுளைத் துதித்தனர்.

கமலா : அப்படியானால் நாமும் பாடல், நடனங்களுடன் கடவுளுக்கு எமது வேண்டுதல்களை ஏறெடுக்கலாம் அல்லவா?

ஆசிரியர் : ஆம்! கமலா, அவ்வாறு செய்யலாம். எமது யூத மூதாதையர்களைப் பின்பற்றுங்கள். சிங்கக் குகையில் போடப்பட்ட தானியேலை நினைவுபடுத்தினீர்கள் அல்லவா?

நயனா : சிங்கக் குகையிலிருந்த தானியேல் கடவுளை நோக்கி வேண்டுதல் செய்தான்.

ஆசிரியர் : ஆம். அவன் தினமும் கடவுளை நோக்கி வேண்டுதல் செய்தான் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாமும் அதே போன்று எங்கிருந்தாலும் வேண்டுதல் செய்யலாம். நாமும் எமது யூத மூதாதையர்களைப் பின்பற்றுவோம்.

செயற்பாடு

1. யூத மூதாதையர்கள் கடவுளுடன் தொடர்பு கொண்ட முறைகள் சிலவற்றை எழுதுக.

2. வேதாகமத்தில் தானியேல் 6 : 10 - 17 வாசிக்கவும்.

3. உமக்கு அக்கதையில் உள்ளத்தைத் தொட்ட ஒரு பகுதியை வரைந்து காட்டுக.